ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2374/25 - 2024 මාර්තු මස 06 වැනි බදාදා - 2024.03.06

2374/25 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/3/3/1/14J/01.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/MV/408K.

மொரகஹகந்த/களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் களுகங்கை தெற்குகரை அபிவிருத்தி நடவடிக்கைக்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பிரதேச செயலாளர் பிரிவிலே லக்கல பல்லேசிய பத்துவவில் E 396 B அகரஹெடிய கிராம அலுவலர் பிரிவிலே அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2023.03.10 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட க.வ. 310243, வலய இல. 28, பத்திர இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 6.9013 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள் :

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: பன்னிபிட்டிய யாய; விபரம்: வயல்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: காணிச்சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 6.9013 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஸ்வர்ணா பெரேரா,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல,
2024, பெப்புருவரி 29.

EOG 03 - 0046

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/3/3/1/14J/02.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/MV/408-I.

மொரகஹகந்த/களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் களுகங்கை தெற்குகரை அபிவிருத்தி நடவடிக்கைக்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பிரதேச செயலாளர் பிரிவிலே லக்கல பல்லேசிய பத்துவவில் E 396 B அகரஹெடிய கிராம அலுவலர் பிரிவிலே அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2023.03.10 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட க.வ. 310243, வலய இல. 28, பத்திர இல. 2 இல் காட்டப்பட்டுள்ள 1.1378 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள் :

*01.* **துண்டு இல. 1**

காணியின் பெயர்: பன்னிபிட்டிய; விபரம்: வயல்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: காணிச்சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 1.1378 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஸ்வர்ணா பெரேரா,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல,
2024, பெப்புருவரி 29.

EOG 03 - 0047